# முஸ்லீம் காங்கிரஸின் ஹர்த்தாலையொட்டி
# கொழும்பில் இன்று பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று மேற்கொள்ள விருக்கும் ஹர்த்தாலை முன்னிட்டு கொழும்பு மாநகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 7 இதழ் 255
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23 — 10 — 1992

## இளவாலையிலிருந்து இரு மாணவர்கள் யாழ்.வந்தனர்

(புலோலி)
இளவாலையிலிருந்து இரு மாணவர்கள் காங்கேசன் துறை ஊடாக குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறை துறை முகத்தை வந்தடைந்தனர்
இளவாலை கன்னியர் மடத்
(4ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தொண்டா தமிழ் கட்சிகள் சந்திப்பு

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமானை ஏழு தமிழ் கட்சிகளின் தலைவர்களும் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்
நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க முன்வைத்த தீர்
(4-ம் பக்கம் பார்க்க)

# புல்மோட்டையில் கடும் தாக்கு
# 10க்கும்மேற்பட்டராணுவம்பலி

### 5 சிப்பாய்கள் படுகாயம்; ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)
திருகோணமலையிலுள்ள புல்மோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை ரோந்து சென்ற ஸ்ரீலங்கா படையினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 10க்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். ஐந்து இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

திருமலை புல்மோட்டை இராணுவ முகாமில் இருந்து டபிலமுல்ல இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற சுமார் 20 படையினரை புல்மோட்டை முகாமிலிருந்து சுமார் 300 யார் தொலைவில் வழிமறித்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் மேற்படி படையினருக்கு உதவியாக டபிள்முல்ல இராணுவ முகாமிலிருந்து வந்த மற்றோர் படையணி மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகளால் கைப பற்றப்பட்ட இராணுவ உபகரணங்கள் வருமாறு: ஏ. கே.
(4ம் பக்கம் பார்க்க)

## வெல்லாவெளியிலும் புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு - வெல்லாவெளி இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதாக இராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க நேற்று தெரிவித்தார்

சிறுபீரங்கிகள் மற்றும் துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஈ)

## 22படையினர் பலி

(கொழும்பு)
பொலநறுவையில் அண்மையில் நடாத்தப்பட்ட தாக்குதலில் இருபத்திரண்டு படை
(4-ம் பக்கம் பார்க்க)

## தொடர் காவலரண்கள் பல ஆனையிறவில் தாக்கி அழிப்பு

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு உப்பளப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் தொடர் காவலரண்கள்மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பல காவலரண்கள் அழிக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 1-45 மணியளவில் ஆரம்பித்த தாக்குதல் சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்ததாகவும், இத்தாக்குதலின்ல் படை
(4ம் பக்கம் பார்க்க)

## யானை தாக்கி பெண் காயம்

(யாழ்ப்பாணம்)
வீட்டுவளவிற்குள் பெரும் அட்டகாசத்துடன் வந்த மதயானை தாக்கியதில் குடும்பப் பெண் ஒருவர் பலத்த காயங்
(4-ம் பக்கம் பார்க்க)

### றேகான் தளுவத்த, கெமுனுகுலதுங்க இருவரும்
## வடபகுதி புதிய தளபதிகளாக நேற்று பதவியேற்பு

(கொழும்பு)
வடபிராந்திய இராணுவ தளபதியாக பிரிகேடியர் றேகான் தளுவத்த நேற்று பதவியேற்றூர்.

யாழ். கமாண்டராக கெமுனு குலதுங்கவும் நேற்று பதவியேற்றூர்.

வடப்ராந்திய இராணுவ தளபதியாக கடமையாற்றி தற்போது இராணுவ தலைமை அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வா கொழும்புக்கு
(4ம் பக்கம் பார்க்க)

## 15 வீரவேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு உப்பளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கைகள் விபரம் வருமாறு:

2-ம் லெப். மதனராசா (நல்லதம்பி ஜெயரூபன்-மன்ணர்), 2-ம் லெப். வேங்கை வல்லிபுரம் விவேகானந்தன்-வவுனியா), லெப். இன்பம் (அரியநாயகம் இரதன்-வவுனியா), வீரவேங்கை சாங்சேயன் (பாலசிங்கம்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் சம்பளம் ஊவாவில் கொள்ளை

(பதுளை)
ஊவா பறணகம பகுதியில் ஆசிரியர்களின் சம்பளப் பணமான ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் மூவரில் ஒருவரை ஊர்காவல் படையினர் பிடித்துள்ளனர்.

ஏனைய இருவரையும்தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (சி)

## ஆசிரியர் சம்பள உயர்வு ஆராய குழு நியமிப்பு

(கொழும்பு)
ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வும், பதவி உயர்வும் வழங்குவது பற்றி ஆராய்வதற்காக குழு ஒன்றை நியமித்துள்ளது.

இக்குழுவில் திட்ட அமு
(4ம் பக்கம் பார்க்க)

**காடுதனை வளர்த்திடுவோம்**
**சூடுதனை தணித்திடுவோம்**

## வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு விரைவில்மூடுவிழா?

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய போக்குவரத்துச்சபை மிக விரைவில் மூடப்படவுள்ளது

இலங்கை போக்குவரத்து சபை அண்மையில் மக்கள் மயப்படுத்தப்பட்டதினுல் வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் வேலை செய்த ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு 50 மாதச் சம்பளத்தை ஒரே முறை வழங்கி இதை உடனடியாக மூடிவிடுவதற்கு அரசு முன்வந்துள்ளது.

இதேநேரம் மூடப்படும் போக்குவரத்துச்சபை டிப்போக்களில் வேலை செய்த ஊழியர்கள் அனைவருக்கும் 60 மாதச் சம்பளம் வழங்கப் படவேண்டும் என்று போக்குவரத்துச்சபை ஊழியர்களின்
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

கோழிப் பண்ணை வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். திரு. ந. பத்மசோதி. கூட்டுறவுப் பரிசோதகர், நெல்லியடி. திக்கம் றோட், ஆலங்கட்டையடி, வதிரி. [சி-6901]

## மரக்கன்றுகள்

பயனுள்ள மரக்கன்றுகள் அன்பளிப்பு. பால்மா வெற்றுப் பக்கற் 25 அல்லது மில்க் வைற் சவர்க்கார மேலுறை தந்து ஒரு மரக்கன்றைப் பெறுங்கள். மில்க் வைற், யாழ்ப்பாணம். [ஏ—2522]

## சமூகக்கல்வி O L

வரலாறு, சமூகக்கல்வி ஆண்டு II விஞ்ஞிடைக்குறிப்புகள் எதிர்வரும் பொதுப் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தாமாக மீட்டல் செய்ய ஏற்றது. ஆக்கம்: நா மயில்வாகனம். புத்தகசாலைகளில் பெறலாம். (சி-6909)

## புலமைப் பரிசில் 1993

ஆண்டு – 4 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் 1993 மாதிரிப் பரீட்சை (தமிழ், கணிதம் ஆங்கிலம்) 24—10—92 சனி மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி—6912)

## ஒய்வூதியம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கூட்டுறவுக் கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுவோரின் ஒய்வூதியம் தற்போது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள வங்கிக்கிளையில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது. (159)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

கலைப்பீடம்

1991/92 கல்வியாண்டிற்குத் தெரிவான கலைப்பீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் 1992 நவம்பர் 2ம் திகதி ஆரம்பமாகும் என்பதனை அறியத் தருகின்றோம்.

சித்தமருத்துவம்

'சித்தமருத்துவத்திற்குத் தெரிவான புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1992 நவம்பர் 2ம் திகதியும், முதலாம் வருடம் உட்பட சகல மாணவர்களுக்கான விரிவுரைகள் 11 நவம்பர் 92ல் ஆரம்பமாகும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

பதிவாளர்,

யாழ். பல்கலைக்கழகம்,
20-10-1992.

(எ—2519)

## தமிழ் அகராதி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் கலை, நாவல், இலக்கியம், சிறுகதை, அரசியல், வரலாறு போன்ற தரமான நூல்களும் சலனம், சுபமங்களா, துளிர் போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (சி—6913)

## மெய்கண்டார் தினம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையல் நாளை சனி, ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு சைவ சித்தாந்த உயர் நிறுவன சார்பில் நிகழும். மூதறிஞர் க.சி குலரத்தினம், சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளை சொற்பொழிவாற்றுவர். சி-6914]

## மெய்கண்டார் வழிபாடு

யாழ். கலைப்புலவர் வீதி திருவாசகமன்றத்தில் திங்கள் பிற்பகல் 3-00 மணிக்கு காஞ்சி மெய்கண்டார் ஆதீனக்குரு நினைவகச் சார்பில் நிகழும். (சி-6915)

## தீபாவளி வெளியீடுகள்

(30-10-92) ராகு, கேதுக்கள் மாற்றமும்; (04-11-92) செவ்வாய் மாற்றமும் எங்கும் விற்பனையாகின்றன. நூலாசிரியர் (Prof.) சத்தியதாஸன். கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. [சி-6916]

## மாணவருக்கு சீருடை

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் இருந்து பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச சீருடை வழங்குவதற்கு 1 கோடி 10 லட்சம் மீற்றர் துணி தேவை என கல்விச்சேவை ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான செலவு 43கோடி 40 லட்சம் ரூபா எனவும் இதனால் 43 லட்சம் மாணவ மாணவிகள் பயனடைவார்கள் என்றும் சீருடைகள் வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [சு]

## பயிற்சிப் பாசறை

(வேலணை)

வடமராட்சி பிரதேசத்தை சேர்ந்த ஆசிரியர்களுக்கான தகுதிநிலை விரிவுரையாளர் பயிற்சி பாசறையை நேற்று முன்தினம் காலை பரியோவான் முதலுதவி சங்கத்தினால் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது (75)

## கைப்பணிப் பொருட்காட்சி

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியில் எதிர்வரும் டிசம்பர் மாதம் கைப்பணி, மனையியல், தையல் பொருட்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது.

இப்பகுதியில் செயற்பட்டுவரும் 19 மாதர் சங்கங்களின் ஒத்துழைப்புடன் இப்பொருட்காட்சியை நடாத்த சகல ஏற்பாடுகளையும் இப்பகுதிக்கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வை ராஜேஸ்வரன் மேற்கொண்டு வருகின்றார். (154)

## இராசி பலன்

23-10-1992
வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 07)

துவாதசி மு. ப. 9.01 வரை. உத்தரம் பி இ. 1 59 வரை. இராகுகாலம் காலை 10.32 முதல் 1 -02 வரை. சுபநேரம் காலை 6—02 முதல் 7-32 வரை சித்தாமிர்தயோகம் பிரதோச விரதம்

மேடம்: வாழ்க்கை மகிழ்ச்சி, சுப நிகழ்ச்சி, பாராட்டு.

இடபம்: கணவர் துன்பம், தொழில் பாதிப்பு, வெறுப்பு.

மிதுனம்: சகோதர பகை, பணக் கஷ்டம், அலைச்சல்.

கடகம்: பகைவர் உதவி, தொழில் சிறப்பு, பயணம்.

சிங்கம்: முரண்பாடு, குடும்ப விரிசல், தனிமைப்படல்.

கன்னி: மனப்பிரமை, வாழ்க்கைச் சுகம், புதிய ஸ்தானம்.

துலாம்: தைரியக் குறைவு, வார்த்தைப் பகை, தொழில் கஷ்டம்.

விருச்சிகம்: மனசி கிளர்ச்சி, வாழ்க்கைவசதி கலைஞானம்

தனுசு: புதியதிருப்பம், தன்னம்பிக்கை குடும்பச்சிறப்பு.

மகரம்: பொருள் நஷ்டம், வாக்குவாதம், காரிய தடை.

கும்பம்: சென்ற இடத்தில் விரோதம், தொழில் பாதிப்பு, குடும்ப பிரிவு.

மீனம்; சன்மானம், புதிய முதலீடு, விருந்து வைபவம்.

ஜோஸ்யர்

## தேசிய சேமிப்பு வங்கி

சுன்னாகம் கிளையின்

நடமாடும் வங்கிச் சேவை

வடஇலங்கை சர்வோதயத்தின் ஏற்பாட்டில்

கீழ் காட்டிய திகதிகளில்

| | | |
|---|---|---|
| 24-10-92 (சனிக்கிழமை) | — | மூளாய் (சர்வோதய நிலையத்தில்) |
| 31-10-92 (சனிக்கிழமை) | — | உடுவில் (சர்வோதய நிலையத்தில்) |
| 07-11-92 (சனிக்கிழமை) | — | மானிப்பாய் (சர்வோதய நிலையத்தில்) |

கூடிய வட்டியை வழங்கி சிறந்த சேவையையும் ஆற்றி வரும் இவ் அரச வங்கியில்;

சிறுவர் சேமிப்பு, சாதாரண சேமிப்பு, நிலையான வைப்பு, அறக்கொடை போன்ற எல்லா வங்கிக்கணக்குகளையும் ஆரம்பிக்கலாம்.

தலைவர்,
வடஇலங்கை சர்வோதயம்.

(சி-6910)

## உற்சவம்

(பண்டத்தரிப்பு)

கொக்குவில் மஞ்சவனப்பதி அருள்மிகு முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தர்சஷ்டி உற்சவம் எதிர்வரும் 26ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளது. (72)

## மரம்நாட்டு விழா

(கொழும்புத்துறை)

தென் மட்டுவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு சங்கத் தலைவி திருமதி எஸ். செல்லையா தலைமையில் மரம்நாட்டு விழா நடைபெறும்.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக சிவதர்மவள்ளவை திரு. க கனகராசாவும், சிறப்பு விருந்தினராக பிரதேச சபைச் செயலாளர் திரு. பூ. சுந்தரம்பிள்ளையும், மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கமும் கலந்து கொள்வார்கள். (154)

## விறகு தட்டுப்பாடு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதியில் தற்போது விறகுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இங்கு விறகு இன்மையால் மக்கள் வேலிகளுக்கு நடப்பட்ட கதியால்களை இழுத்து விறகாகப் பயன்படுத்தி வருகின்றனர். (139)

## சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பாலர் பாடசாலை வாசலில் தமது சைக்கிளை நிறுத்தி விட்டு மகனை கூட்டி வரச் சென்றவரின் 4 500 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் மானிப்பாயில் நிகழ்ந்துள்ளது.

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் என். செல்வராசா என்பவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. (72)

## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

## External Registration 1991/92

**Admission and Welcome of Freshers and Sophomore (External Student) 1991/92**

Admission and welcome of external students will take place in two sessions under the patronage of the Vice-Chancellor in Kailasapathy Auditorium.

Session I - 24-10-92 (Saturday) at 2-00 p. m. for Freshers First in Arts/Commerce

Session II - 24-10-92 (Saturday) at 3-00 p. m. for Sophomore

Bachelor of Arts General & Special Part I
Bachelor of Commerce Part I

Please collect your provisional registration letter from the External Examination Unit.

Registrar

A-2517

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிக் கற்கைநெறி பதிவுகள்

1991/1992 கல்வியாண்டு

யாழ்ப்பாணம்/வெளிவாரிக் கற்கைநெறிக்கான கலை முதல், வர்த்தக முதல் வர்த்தகமானி பகுதி 1, பொதுக் கலைமாணி பகுதி 1 ஆகியவற்றிற்குப் பதிவு செய்த மாணவர்கள் தங்கள் பதிவுக்கான கடிதத்தை வெளிவாரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் தலைமையில் பின்வரும் முறையில் பிரவேச, வரவேற்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அமர்வு I — 24-10-1992 (சனிக்கிழமை) பிற்பகல் 2-00 மணி.
புதிய மாணவர்கள் (கலை/வர்த்தகம்)

அமர்வு II — 24-10-1992 (சனிக்கிழமை) பிற்பகல் 3-00 மணி.
இரண்டாம் வருட மாணவர்கள் (கலை/வர்த்தகம்)

பதிவுபெற்ற அனைத்து மாணவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ-2518)

## தென்பகுதியில் இனக் குரோதத்தை தூண்ட முஸ்லிம் கட்சிகள் முயற்சி

(கொழும்பு)

தென்பகுதியில் இனக்குரோதத்தை தூண்டும் விதத்தில் முஸ்லிம் கட்சிகள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் சுவரொட்டிகளை ஒட்டியும் வருகின்றனவாம்.

இன்று தெற்கில் அனுஷ்டிக்கப்பட ஏற்பாடாகியுள்ள 'கரிநாள்' குறித்து வெளியிடப்பட்ட பிரசுரங்களிலும், சுவரொட்டிகளிலும் இவ்வாறான தமிழர் எதிர்ப்பு வாசகங்கள் பல காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொலநறுவையில் இடம் பெற்ற கொலைச் சம்பவங்களை பயன்படுத்தி அரசியல் லாபம் தேட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் மற்றும் சில முஸ்லிம் கட்சிகளும் முயன்று வருவதாக அரசு தரப்பு முஸ்லிம் எம்.பிக்கள் கூறியுள்ளனர். (சி)

## வடமராட்சியில் 25 பாலர் பாடசாலைகளை போரூட் இயக்குகிறது

(நல்லூர்)

'வடமராட்சிப் பிரிவுக்கான போரூட் நிறுவனம் அப்பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான பல ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 25 பாலர் பாடசாலைகளை இயக்கி வருவதுடன் இப்பகுதியில் ஆண்டு 2 முதல் 11 வரைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பகுதிநேர இலவசக் கல்வியையும் வழங்கி வருகின்றது.

இதனுடன் சங்கீதக்கலை, தையல்தொழிற் பயிற்சிகளையும் நடாத்தி வருகின்றது.

இப்பிரதேசத்தில் கடற்றொழிலாளருக்கு வலை, உபகரணங்களும் விவசாயிகளுக்கு உர வகைகள், மருந்துகளைக்கடன் அடிப்படையில் வழங்கி வருகின்றது. சுற்றுாடல் பாதுகாப்புச் செயற்திட்டத்தின் கீழ் வல்லைப் பகுதியில் மர நடுகையை மேற்கொண்டுள்ளது' என்று போரூட் திட்ட அமைப்பாளர் என். கோகுலதாஸ் வடமராட்சிக்கான இரண்டு நாள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட பத்திரிகைப் பயிற்சி மாணவர்களுடனான ஒன்றுகூடலின் போது தெரிவித்தார்.

மேற்படி ஒன்றுகூடல் தம்பசெட்டியிலுள்ள போரூட்டின் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது இந்நிகழ்விற்கு செயலகப் பொறுப்பாளர் இரா சந்திரசேகரசர்மா தலைமைதாங்கினார். திரு. கோகுலதாஸ் மேலும் கூறுகையில் சமூக நல்லொழுக்கச் செயற்பாட்டின் கீழ் கிராமங்களிலும் பாடசாலை மாணவர்களுக்கூடாகவும் போதை ஒழிப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளதுடன் இப்பிரதேசத்தின் அறிவு வளர்ச்சி அபிவிருத்திக்காக சுப்பர் மடத்தில் நூல்நிலைய மொன்றை நிறுவச் செயற்படுத்துவதாகவும் தெரிவித்தார். (158)

## காரைநகர் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

1991ம் ஆண்டு காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் 1991ம் ஆண்டு செப்டம்பர் மாத மதிய உணவு முத்திரையைத் தமிகள் பாடசாலை அதிபர்களிடம் இருந்து நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்..

## சுயதொழில் ஊக்குவிப்பு கடன்

(புலோலி)

சர்வோதய இயக்கம் வடமராட்சிப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கவுள்ளது.

வடமராட்சியிலுள்ள கரவெட்டி பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த வறிய விவசாயிகளுக்கே இக்கடன்கள் வழங்கப்படவுள்ளன. (61)

## கூட்டுறவு தினவிழா

(மானிப்பாய்)

தென்மராட்சிக் கூட்டுறவுக் கோட்டத்தின் சர்வதேச கூட்டுறவு தினவிழா நாளை 24-ந் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (71)

## தபால் பெட்டிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பழுதடைந்துள்ள தபால் பெட்டிகளின் திருத்த வேலைகள் தற்போது தபால் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (159)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மிட்ரவுன் ரேட்டறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

முதல் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி அணியும் 2-வது போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும் மோதும். (59)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கல்லூரிகளிடையே நடைபெறறு வரும் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியும, சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதுகின்றன.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி போட்டி இன்று பிற்பகல் 2-15 மணிச்கு ஆரம்பமாகின்றது. (வி)

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

(புலோலி)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க வடமராட்சிக்கிளையின் சங்க வடமராட்சிக் கிளையின் முதலாமாண்டு நிறைவு விழா நெல்லியடியிலுள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

வடமராட்சிக்கிளைத்தலைவர் திரு. க. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன், கண்டாவளை பிரதேச செயலர் திரு. இ. செல்லத்துரை ஆகியோர்பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (61)

## இன்று

(உடுவில்)

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 23-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சு. தம்பித்துரை தலைமையில் நடைபெறும். (109)

0 0 0

(பருத்தித்துறை)

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விஞ்ஞான மாணவ மன்றம் இன்று 23-ம் திகதி வெள்ளிக்கிழமை ஒழுங்கு செய்துள்ள "பொதுவான நோய்களும் தடுப்பு முறைகளும்" பற்றிய சிறப்புக் கருத்தரங்கில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் கருத்துரைகளை வழங்குவார். (52)

## தாதிகள்பயிற்சிக்கு 10 பேர் தெரிவு

(புலோலி)

யாழ். அரசினர் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் தாதிகள் பயிற்சிக்கு இம்முறை பத்துப் பேர் மட்டுமே தெரிவுசெய்யப் பட்டனர்.

இவர்களில் 7 பேர் மன்னார், கிளிநொச்சி, காரைநகர், யாழ்ப்பாணம், மந்திகை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றியவர்களாவர்.

ஏனைய மூவரும் வடக்குக்கு வெளியே இருந்து விண்ணப்பித்து பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்தவாரம் யாழ். அரசினர் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகின. (61)

## சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு அரை கிலோ சீனி விநியோகிக்கின்றது.

நாளை சனிக்கிழமை முழு நாளும் விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது

## கதம்ப நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வீரவேங்கை கஸ்ரோ கமலநாதன் நினைவாக 25ம் திகதி காலை 10.30 மணிக்கு திருநெல்வேலி சைவவித்தியா விருத்தி சங்க நிறைவாழ்வு இல்லத்தில் பல கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. (சு)

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இலங்கையரும் கண்காணிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்காக இலங்கை அரசாங்க கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் இரு உறுப்பினர்க்கு அமெரிக்க இளைஞர் அரசியல் தலைவர்களின் சபை அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்க எம். பிக்கள் சார்பில் ராஜாங்க அமைச்சர் ஜனாப் இமதியாஸ் பாக்கீர் மாக்காரும் சுதந்திரக் கட்சி சார்பில் இரத்தினபுரி மாவட்ட எம். பி திரு. கபில அபயரத்னவும் இதற்காக அமெரிக்கா சென்றுள்ளனர்.

நாளை மறுதினம் 25-ம் திகதி முதல் நவம்பர் 5-ம் திகதி வரை அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 50 நாடுகளை சேர்ந்த 40 வயதுக்கும் குறைந்த 100 அரசியல் வாதிகள் வரை பங்குபற்றுவர். (சி)

## வணிகர் சங்கம் புதிய அலுவலகம்

(பருத்தித்துறை)

புலோலி வணிகர் சங்கத்திற்கான புதிய அலுவலகமொன்று மந்திகை சந்தியிலுள்ள மாடிக்கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வணிகர் சங்க அலுவலகத் திறப்புவிழா புலோலிவணிகர் சங்கத்தலைவர் திரு. கே. வி. கணேசராசா தலைமையில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் திரு. மகான் தமிழீழ தேசியக்கொடியையும் வர்த்தகர் திரு. கே. வி. செல்வராஜன் வர்த்தகர்சங்க கொடியையும் ஏற்றிவிழாவை ஆரம்பித்து வைத்தனர். (52)

## உயர் தொழில் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட உயர்தொழில் ஆங்கிலச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சான்றிதழ்கள் யாழ். திறந்த பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தமது சான்றிதழ்களை வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். திறந்த பல்கலைக்கழக அதிபர் அறிவித்துள்ளார். (159)

## ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு 24-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணம், வேலணை, புங்குடுதீவு, மருதனுமடம், பண்டத்தரிப்பு பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய கோட்டங்களில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டத்தில் இம்மாதம் 24ம் திகதி யாழ். இந்துமகளிர் கல்லூரியில் 3 தொடக்கம் - 06ஆண்டு வகுப்புக்களுக்கும்.

வேலணை, புங்குடுதீவு ஆகிய கோட்டத்திற்கு நவம்பர் மாதம் 11ம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆண்டு 7 தொடக்கம் 11 வரை வகுப்புகளுக்கும்.

மருதனர்மடம் கோட்டத்தில் இம்மாதம் 27ம் திகதி ஆண்டு 3தொடக்கம் 6 ஆண்டு வரை வகுப்புக்களுக்கும் ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 11வரை நவம்பர் மாதம் 12ம் திகதி இராமநாதன் கல்லூரியிலும்.

பண்டத்தரிப்புக் கோட்டத்தில் இம்மாதம் 28ம் திகதி ஆண்டு 3 தொடக்கம் 06 வரைக்கும் நவம்பர் மாதம் 13ம் திகதி ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 11 வரையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்

பருத்தித்துறை கோட்டத்துக்கு இம்மாதம் 29ம் திகதி ஆண்டு 3 . ஆண்டு 06 வரை. நவம்பர் மாதம் 14ம் திகதி ஆண்டு 7 தொடக்கம் 11 வரை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்

சாவகச்சேரி கோட்டத்துக்கு இம்மாதம் 31-ம் திகதி ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 6 வரை. அடுத்த மாதம் 16ம் திகதி ஆண்டு 7 தொடக்கம் 11 வரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன

இவ்வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு யாழ். கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். கருத்தரங்கு காலை 8-30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறும். (சு)

## தனிக்கட்சி ஆரம்பிப்பு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் ஜனதாதள் கட்சியின் ஒரேயொரு உறுப்பினரான டாக்டர் எம். குமாரதாஸ் அக்கட்சியிலிருந்து விலகித் தனிக் கட்சியொன்றை ஆரம்பித்துள்ளார்.

கட்சியின் தேசிய கொள்கைகளில் அதிருப்திகொண்டே தாம் விலகுவதாகவும் தனது புதிய கட்சிக்கு ஜனதாதள் காமராஜ் என்று பெயர் வைத்திருப்பதாகவும் தானும் தன்து ஆதரவாளர்களும் திரு. மூப்பனார் தலைமையில் காமராஜ் ஆட்சியைக் கொண்டு வர பாடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சைவசமய சந்தான குரவர் மெய்கண்டதேவநாயனார் திருநாளை முன்னிட்டு மூன்று நாள் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நாளை சனியும் ஞாயிறும் பிற்பகல் 3 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

சைவப் புலவர் க. சி. குலரத்தினம், சித்தாந்தமணி சைவப் புலவர் மு. திருஞான சம்பந்தபிள்ளை ஆகியோர் உரையாற்றுவார்கள்.

திங்கள் பிற்பகல் 3மணிக்கு காஞ்சி மெய்கண்டார் ஆதீனக் குரு நினைவகச்சார்பில் கலைப் புலவர் வீதி திருவாசக மன்றத்தில் குருவழிபாடு நிகழும்.

## சமூக அபிவிருத்தி குழுக்கள்

(நல்லூர்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடமைப்பு மானியம் வழங்கப்படும் பொருட்டு, சமூக அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள். சனசமூக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், சுகாதாரக் குழுக்கள், சிக்கனகடன் வழங்கும் சங்கம் போன்றன அங்கம் வகிக்கின்றன. இதன்மூலம் தகுதியானவர்களுக்கு மானியமாக 8,500 ரூபா வழங்கப்படவிருக்கின்றது. (158)

# வடக்கு கிழக்கு போரை உடன் நிறுத்தவேண்டும் அல்லதுவிளைவுபயங்கரமாகும்

## காமினி பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

"வடக்கு-கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு சகல சமூகங்களும்ஒன்றுபட்டு முயற்சி எடுக்கவேண்டும். தவறுமேயானால் பயங்கரமான விளைவுகளை நாடு சந்திக்க வேண்டிவரும்"

பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற அவசரகால நீடிப்பு பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர் அத்தாவுட செனவிரத்தன உரையாற்றுகையில்: வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு இந்திய அரசின் உதவியுடனேயே தீர்வுகாணப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்னைக்கு தீர்வுகாணப்படவேண்டுமானால் வடபகுதி மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்றும் கிங்ஸ்லி ரி. விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையிலேயே இப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று வீரன் சென்னன் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார். தினேஷ் குணவர்த்தன, கே.பி. இரத்நாயக்கா உட்பட ருபலம் மேற்படி விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர். (க)

### யானை தாக்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் யாழ் போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்:

முழங்காவில் விநாயகபுரத்தை சேர்ந்த திருமதி முத்தம்மா தர்மலிங்கம் (38 வயது) என்பவரே யானையால் அண்மையில் தாக்கியெறியப்பட்டு காயப்பட்டவராவார். (56)

# ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த தடைவிதிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று வெள்ளிக்கிழமை நாடாத்தவிருக்கும் கரிநாள் நிகழ்ச்சியில் எவரும் ஆர்ப்பாட்டம் செய்யவோ அல்லது வீதியில் இறங்கி ஊர்வலம் நடத்தவோ கூடாது என அக்கட்சியின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)

# இந்தியா மீது பங்களாதேஷ் மோசுல்

(டாக்கா)

இந்தியாவில் சட்டத்துக்கு புறம்பாக வாழ்ந்துவரும் லட்சக்கணக்கான மக்களில் இரண்டரை லட்சம் பங்களாதேஷ் மக்களை "திருப்பி அனுப்பும் நடவடிக்கை" என்ற பெயரில் இந்தியா வங்களாதேசத்துக்கு அகதிகளை திருப்பி அனுப்பவுள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கையை ஒருமனதாக பங்களாதேஷ் நாடாளுமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை எதிர்க்கட்சியும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

கடந்த 21 ஆண்டு காலத்தில் இந்தியாவை பங்களாதேஷ் அரசாங்கம் முதன்முறையாக இப்போதுதான் கண்டித்துள்ளது. சு

# புலிகளின் நிலைபற்றி ஆராய டிக்ஷிற் தமிழகம் வருகிறார்

(புதுடில்லி)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நிலைபற்றி ஆராய இந்திய வெளியுறவுச்செயலர் திரு. ஜே.என். டிக்ஷிற் விரைவில் தமிழகம் வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் அண்மைக்காலமாக புலிகளின் நடமாட்டம் தீவிரமடைந்து வருவதாக திரு. சுப்பிரமணியசுவாமி மத்திய அரசுக்கு தொடர்ந்தும் புகார்செய்து வந்தார்.

இதையடுத்து புலிகளின் நடவடிக்கைகள் குறித்து ஆராய திரு. டிக்ஷிற் வேறு பல அதிகாரிகள் சகிதம் அடுத்தசில தினங்களில் தமிழகம் வந்து பல பகுதிகளுக்கும் செல்லவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

### இளவாலையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தங்கி இருந்த மாதகல் பற்றிமா வீதியைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜோன் இமனுவேல் (வயது 19), மாதகல் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுவேந்திரன் ஆகிய இரு மாணவர்களே கப்பல்மூலம் நேற்று நண்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தவர்களாவர்.

எதிர்வரும் 26ம் திகதி நடைபெறும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பௌதிகவியல் பாடத்துக்கு தாம் தோற்றவேண்டுமென அங்கு வந்த சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மூலம் இராணுவத்திடம் கேட்டுக்கொண்டதன் பேரில் தாம் யாழ் வர அனுமதிப்பட்டதாக அம்மாணவர்கள் தெரிவித்தனர்.

இம்மாணவர்களில் இமானுவேல் பருத்தித்துறை முனையில் உள்ள உறவினரிடமும் தவேந்திரன் யாழ் நகரிலுள்ள உறவினரிடமும் செஞ்சிலுவை சங்க மூலம் அழைத்துச்செல்லப்பட்டனர். (61)

# திருநெல்வேலியில் புடவைக்கடையிலிருந்து தீபாவளிஉடுப்புகள்கொள்ளை

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சந்தியில் உள்ள பிடவைக்கடை ஒன்று உடைக்கப்பட்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தருவிக்கப்பட்ட பல லட்ச ரூபா பெறுமதிமிக்க பிடவைகள் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன் இரவு இத்துணிகர திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதேவேளையில் திருநெல்வேலிக்கடைகளுக்கு இரவுநேர காவலாளிகள் கடமை புரிவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் ஆடியபாத வீதியிலுள்ள ஒருபிடவைக்கடையிலும் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (157)

### பணமாக ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலங்கை வங்கி மேற்பார்வைக்கிளையில் ரயில்வே திணைக்களத்தின் இளைப்பாறிய ஊழியர்களின் ஓய்வூதியமும், உள்ளூராட்சி திணைக்களத்தின் இளைப்பாறிய ஊழியர்களின் ஓய்வூதியமும் இன்று 23ம் திகதி பணமாக வழங்கப்படும் என்று மேற்படி வங்கியின் பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

### ஆசிரிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாக்கல் அமைச்சு, பொதுநிர்வாக அமைச்சு கல்வி அமைச்சு திறைசேரி ஆகியவற்றின் அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றார்கள். (வி)

## வெளிவாரி மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கை (1991/1992 ம் ஆண்டு) நெறிக்கான கலைமுதல், வர்த்தக முதல், வர்த்தகமாணி பகுதி 1, பொதுக் கலைமாணி பகுதி 1 ஆகியவற்றுக்குபதிவுசெய்த மாணவர்கள், தங்கள் பதிவுக்கான கடிதத்தை வெளிவாரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் துணைவேந்தர் தலைமையில் நடைபெறும் பிரவேச வரவேற்பு நிகழ்ச்சிகள் நாளை 24ம் திகதி சனிக்கிழமை 2 மணி தொடக்கம் இருஅமர்வுகளாக இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (சு)

# தெரிவுக் குழுவின் திட்டத்தை தமிழ் கட்சிகள் நிராகரித்தன

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்களமுனசிங்க இனப்பிரச்னை தீர்வு குறித்து முன்வைத்த திட்டத்தினை ஏழு தமிழ்க் கட்சிகளும் ஒருமித்து நிராகரித்துள்ளன.

இந்த நிராகரிப்பு தொடர்பான விபரங்களை தமிழ்க் கட்சிகள் தெரிவுக்குழுவின் தலைவர் திரு மங்களமுனசிங்காவுக்கு கடிதம் மூலம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதன்மூலம் தெரிவுக்குழுவின் நடவடிக்கையில் மேலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படாமல் முன்வைக்கப்படும் எந்தத் தீர்வும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதென சில தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன. (சி)

### 22 படையினர்

(4ம் பக்கம் பார்க்க)

யினர் பலியானதாக நாடாளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (சு)

### 15 வீரவேங்கைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமலன்-சாவகச்சேரி). வீரவேங்கை தேவன் (டெனிஸ்லாஸ் திவாகரன்-புதுக்குடியிருப்பு), வீரவேங்கை மாணிக்கவாசகன் (கணபதிப்பிள்ளை லோகநாதன்-புதுக்குடியிருப்பு), வீரவேங்கை முருகன் விக்னேஸ் (கணேஸ் வின்சன் - மட்டக்களப்பு), வீரவேங்கை மலரவன் (சின்னத்தம்பி புஸ்பராசா - சாஸ்திரிகூழாங்குளம்) கப்டன் பாணன் (ஆனந்தராசா ஆகராசா-கிளிநொச்சி) 2ம் லெப். பிரதீபன் (சிவராசலிங்கம் பத்மசிறி - கிளிநொச்சி), 2ம் லெப். குட்டிக்கண்ணு (கணபதிப்பிள்ளை சிவகுமார் - வவுனியா) வீரவேங்கை பாண்டியன் (இராசுரமேஸ் - கொக்குவில்), வீரவேங்கை ஞானதாஸ், லெப். இசைவாணன் (பொன்னுத்துரை ஞானரத்தினம் - மாங்குளம்), 2ம் லெப் தமிழரசன் (சத்தியானந்தன் சிவகுமார் - அராலை). (சு)

## 2000 அகதிகள் நாடுதிரும்ப உள்ளனர்

(சென்னை)

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இரண்டரை லட்சம் அகதிகளில் இரண்டாயிரம் அகதிகள் விரைவில் இலங்கை திரும்பவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அங்கிருந்து படகுகள் மூலம் தலைமன்னாருக்கு வருவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை 29,000 அகதிகள் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

### றேகான் தளுவத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளார்.

புதிய வடபகுதித் தளபதிகள் உடனடியாக வடபகுதி செல்வார்கள் எனவும் தெரிய வருகிறது. (சி)

### வடபிராந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி விடயம் பற்றி அரசுக்கும் ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் தற்போது கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது. (வி)

### புல்மோட்டையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல். எம். ஜி. 01, ரி-56 ரக துப்பாக்கிக - 08, ரி - 81 ரக துப்பாக்கி 01, ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் 05, அதற்குரிய தொடர் ரவைகள் 485, ரி-56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் 28, ரி-81 ரக துப்பாக்கிக் குரிய ரவைக் கூடுகள் 04, நடுத்தர ரவைகள் 1270, ஏ. கே. ரக துப்பாக்கி ரவைக் கூடு தாங்கி அணிகள் 09, சப்பாத்து 10சோடி. கிற்பாக்-1, இராணுவ இடுப்புப்பட்டிகள்-06, சாதாரண இடுப்புப் பட்டி-02, தலைக் கவசங்கள்-07, கண்ணிவெடிக் கிண்டிகள்-06, கத்திகள்-02, மழைக் கவச அணிகள்-02, தொப்பிகள்-02, ஆகியனவாகும்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை கலைச் செல்வன் (கணபதிப்பிள்ளை- தமிழ்வேந்தன்-மூதூர்) வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

திருமலைப் பகுதியில் நடைபெற்ற இத்தாக்குதலை ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க நேற்று உறுதிப்படுத்தினார். (க)

### அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வினை தாங்கள் நிராகரித்து விட்டதாகவும் தொண்டமானிடம் இவர்கள் தெரிவித்ததுடன்-

இதுகுறித்து மேற்கொண்டு தாங்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கை குறித்தும் திரு. தொண்டமானுடன் பேசியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

### தொடர்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

யினர் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் விடுதலைப்புலிகள் ஆனையிறவு பிரதான இராணுவ முகாமை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் பல இராணுவ தளபாடங்களையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-56)

### முஸ்லிம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசார் தெரிவித்துள்ளனர்

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், மக்கள் தமது அன்றாட அலுவல்களை மேற்கொள்வதற்கும் அவசியமான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகளுக்கு செல்லும் பிள்ளைகளை தடுத்து நிறுத்த எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் நாடுமுழுவதிலும் உள்ள பள்ளிவாசல்களை சுற்றிலும் பொலிஸ் படைகளும் பரா இராணுவப்படைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81